புதுச்சேரி நகராட்சி
தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் (DAY-NULM)
செய்தித்தாள் அறிவிப்பு

நகர சாலையோர வியாபார குழு (Street Vendors Town Vending Committee) உறுப்பினர் தேர்தல்

**குறித்த செய்திக்குறிப்பு**

**தேதி : 13.09.2025**

புதுச்சேரி சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரம் மற்றும் சாலையோர வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல்) விதிகள், 2017 மற்றும் சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தைப் பாதுகாத்தல் மற்றும் சாலையோர விற்பனையை ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 2014 (மத்திய சட்டம் 7 - 2014) இன் படி நகர வியாபார குழுவின் 12 சாலையோர வியாபாரிகளின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான **தேர்தல் கால அட்டவணை** 02.09.2025 **அன்று** நாளிதழ்களில் வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, நகர வியாபாரக் குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் குறித்தும் மற்றும் ஒதுக்கிட்டுப் பகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ்கள் சம்பந்தமாக பின் வரும் விபரங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

அ. **வேட்பாளர் சான்றிதழ்:**

ஒதுக்கீட்டுப் பகுதிகளில் போட்டியிட விரும்பும் வேட்பாளர், தாம் 1964 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு (புதுச்சேரி) அட்டவணை சாதிகள் உத்தரவு (The Constitution (Pondicherry) Scheduled Castes order 1964) அல்லது அரசாணை எண். 9/2001, நாள்: 19.02.2001 (the G.O. Ms. No.9/2001-Wel (SW-II) dated 19.02.2001 மற்றும் இதர அரசாணைகள்) ஆகியவற்றின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சாதி/சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதைக் குறிப்பிட்ட, சம்பந்தப்பட்ட தாசில்தார் வழங்கிய சாதி/சமூகச் சான்றிதழை, சமர்ப்பிக்க வேண்டும். (ஒதுக்கீட்டை காட்டும் அட்டவணையில், 'BC' என்ற பதம் 'OBC', 'MBC', 'BCM', 'BT' என்பவற்றை உள்ளடக்கியதாகும் மற்றும் 'SC' என்ற பதம் 'SC' மற்றும் 'ST' என்பவற்றை உள்ளடக்கியதாகும்.)

ஆ. **பிரமாணப் பத்திரம்:**

தேர்தலில் போட்டியிட விரும்பும் அனைத்து வேட்பாளர்களும், தமக்கு எதிராக எந்தவித குற்றவியல் வழக்கும் நிலுவையில் இல்லை என்பதைக் குறிப்பிட்டு, கீழே வழங்கப்பட்டுள்ள குறிப்பிட்ட படிவத்தில் பிரமாண பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும்.

**குற்றவியல் வழக்கு இல்லை என்ற பிரமாணபத்திரம்**
**(குறிப்பு: ரூ.10/- மதிப்புள்ள முத்திரைத்தாளில் தயாரிக்க வேண்டும்)**

1. நான், ................................, ............................ அவர்களின் மகன்/மகள், ........................................................................................ விலாசத்தில் வசித்து வருபவன்/வள், நகர விற்பனைக் குழுவின் பகுதி எண் ............ இல் நடைபெறும் தேர்தலில் போட்டியிடுகிறேன் என்று இதன் மூலம் பிரமாணமாக அறிவிக்கிறேன்.

2. எனக்கு எதிராக எந்தக் குற்றவியல் வழக்கும் நிலுவையில் இல்லை என்றும், கடந்தகாலத்தில் நான் எந்தக் குற்றவியல் வழக்கிலும் குற்றவாளியாகத் தண்டிக்கப்படவில்லை என்றும் பிரமாணமாக அறிவிக்கிறேன்.

கையொப்பம் (பிரமாணம் செய்பவர்)
தேதி
முகவரி

நோட்டரி முத்திரை மற்றும் கையொப்பம்
பெயர்
எண்

மேலும், தேர்தலில் போட்டியிட விரும்பும் சாலையோர விற்பனையாளர்களுக்கு போதுமான நேரத்தை வழங்குவதற்காக மாற்றியமைக்கப்பட்ட தேர்தல் கால அட்டவணை பின்வருமாறு:

| | |
|---|---|
| 04.09.2025- | வேட்புமனு தாக்கல் தொடங்கும் நாள். (காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை உணவு இடைவேளை மதியம் 1:00 முதல் 2 மணி வரை) |
| 20.09.2025 – | **வேட்புமனு தாக்கல் செய்யும் கடைசி நாள்** (மாலை 5.00 **மணி வரை**) |
| 22.09.2025 – | **வேட்புமனு பரிசீலனை** நாள் |
| 23.09.205 _ | வேட்புமனுவை வாபஸ் பெற கடைசி நாள் |
| 24.09.2025 – | **இறுதி வேட்பாளர் பட்டியல் அறிவிப்பு** |
| 03.10.2025 - | தேர்தல் நடைபெறும் நாள் (காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை) மற்றும் முடிவுகளை அறிவிக்கும் நாள்(மாலை 6 மணி அளவில்). |
| 06.10.2025 - | நகர சாலையோர வியாபாரிகள் குழு முதல் கூட்டம் நடைபெறும் நாள். (மாலை 4 மணி அளவில்) |

Kandasamy 13/9/2025

(மு. கந்தசாமி)
ஆணையர்
புதுச்சேரி நகராட்சி